## DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | |
|---|---|---|
| **Calendar** | : | **CC. 08/2017.** |
| **Miscellaneous** | : | |
| **Summary Trial** | : | |
| **Maintenance** | : | |
| **Deposition of witness for prosecution** | : | **PW.10 ராமர்** |
| **Fathers Name/Husband Name** | : | **மாணிக்கம்** |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 27.10.2022

---

**முதல் விசாரணை:**

**1.** நான் டி.சுப்புலாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். புகார்தாரர் எனது ஊர்க்காரர். சாட்சி குமரேசன் எனது ஊர்க்காரர் ஆவார். அன்றையதினம் காலை 11.00 மணியளவில் ஆண்டிப்பட்டியிலிருந்து மதுரையை நோக்கி பூக்களை ஏற்றிக்கொண்டு தொ.விலக்கு அருகே வந்துகொண்டிருந்த பிக்அப் வேன் ஜான்ட் கட்டாகி அதனால் வண்டி சாய்ந்ததில் வண்டியின் உள்ளே உட்கார்ந்திருந்த நான், புகார்தாரர் மற்றும் சாட்சி குமரேசன் ஆகியோரும் வண்டியோடு சேர்ந்து கீழே சாய்ந்துவிட்டோம்.

2. வேனுக்கு பின்னால் பஞ்சன், சீனிமுத்து, மாடசாமி ஆகிய எங்கள் ஊர்க்காரர்களும் வெளியூர்காரர்கள் 5 நபர்களும் இருந்தார்கள். வண்டியில் இருந்தவர்கள் வண்டி சாய்ந்ததில் ரோட்டில் கீழே விழுந்துவிட்டார்கள் அப்போது கிழக்கிலிருந்து மேற்காக வந்த லாரி ரோட்டின் கீழே விழுந்தவர்கள் மீது ஏறியது.

4 பேர் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார்கள்.

3. லாரியை ஓட்டி வந்தவரை நான் கவனிக்கவில்லை. எனக்கு மூக்கில் சிறிதாக காயம் ஏற்பட்டு ரத்தம் வந்தது, இடதுபக்க இடுப்பில் அடிபட்டது. மற்ற நபர்களுக்கும் அடிபட்டது. சம்பவயிடத்தில் பக்கத்தில் இருந்த ஊர்க்காரர்கள் ஓடிவந்து எங்களுக்கு உதவினார்கள். ஆம்புலன்சில் அங்கிருந்து உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிட்சைக்காக அழைத்துச்சென்றார்கள். புகார்தாரர் மகாராஜன் புகாரை கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

**4.** சம்பவம் நடந்ததாக சொல்லும் ரோடு தேசிய நெடுஞ்சாலை என்று சொன்னால் சரிதான். நான், டிரைவர் குமரேசன் மற்றும் புகார்தாரர் கர்ணமகாராஜன் ஆகியோரும் வண்டியின் முன்பக்கம் அமர்ந்திருந்தோம் என்றால் சரிதான். வழக்கில் காயம்பட்ட மற்றும் இறந்த மற்ற நபர்கள் வண்டியின் பின்பக்கம் அமர்ந்து வந்தார்கள் என்றால் சரிதான். நாங்கள் வந்த வண்டியின் ஜான்ட் கட்டாகி ரோட்டில் குத்தியதால் தான் கிழமேல்ரோட்டில் தென்புறம் எங்கள் வண்டி தூக்கி வீசப்பட்டது என்றால் சரிதான். ஜான்ட் உடைந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரி வாகனத்தை எப்படி ஓட்டி வந்தார் என்று எனக்கு விபரம் தெரியாது.

S.d./ Ramar

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.